Y.M.C.A

# கிழக்கில் தமிழ் வேடரையும் படையினர் விட்டுவிடவில்லை!

கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆழிக்கம்பை என்ற வனக் குறவர் (தமிழர்கள்) வாழும் கிராமம் மூன்றிம் கும்பல் ஒன்றினால் மோசமாகத் தாக்கப்பட்டு பன்னிருவர் உயிர் இழந்துள்ளதாக அக்கிராம வாசிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி திருக்கோவில் பாடசாலையில் அகதிகளாகத் = 04 ஆம் பக்கம் பார்க்க

★ நீதிமன்றத்தில் வழக்கு தாக்குதல்

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மேலதிகாரிகள் ஊழல் அம்பலம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உயரதிகாரிகளின் ஊழல் குறித்து விவரங்கள் விசாரணையில் வெளிவந்துள்ளது. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் சொத்துகளை இந்த அதிகாரிகள் கையாடியுள்ளமை குறித்து தெரியவந்துள்ளது. இது குறித்து மேலதிக விசாரணையை தொடருமாறு தகவல் துறை ராஜாங்க அமைச்சு கூட்டுத்தாபனத்தின் தற்போதைய பணிப்பாளரைக் ...04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 111 பிரமோதூத பங்குனி 04 (18-03-1991) திங்கள்

## கச்சதீவில் தமிழக மீனவர்

கச்சதீவுக்கு அருகில் இலங்கை எல்லைக்குள் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக வள்ளங்கள் நான்கை ஸ்ரீலங்கா கடற்படையினர் அப்பால் செல்லுமாறு உத்தரவிட்டதாகக் கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுப்படை தலைமையகத்தில் அனுமதி பெற தரகர் தேவை

வடபகுதிக்கு ஹொறிஸில் பொருள்களைக் கொண்டு வர 'கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திற்கு' அனுமதிப்பத்திரம் பெறச் செல்வோரையும் தரகர்கள் தொல்லை கொடுக்கிறார்களாம். இந்த அலுவலகத்தின் முன்பாக நிற்கும் இத்தரகர்கள் இங்கு வரும் வடபகுதி வர்த்தகர்களை பயமுறுத்துகின்றனர். அதனை மீறிச் சென்றால் வாசலில் காவல் புரியும் இராணுவச் சிப்பாய் உள்ளே செல்ல பல சாக்குப்போக்கு கூறி அனுமதி மறுக்கிறாராம். இதனால் தரகர் மூலம் அனுமதிப் பத்திரம் பெற 4000ரூபா வரை செலவாகிறது என பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவித்தார். (ப-24)

★ மன்னார் - சிலாவத்துறை

# பாதுகாப்பு அமைச்சர் வந்து திரும்பிய சில மணி நேரத்தில் பாரிய தாக்குதல்

## விமானப்படை உதவியுடன் வெளியேறிய இராணுவம் - புலிகள் மோதல்

புதிய பாதுகாப்பு இணையமைச்சராக பதவியேற்ற பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று முதல் தடவையாக மன்னாருக்கு வந்து திரும்பிய சில மணிநேரங்களிலேயே அங்கு, பெரும் தாக்குதல் ஒன்று நடைபெற்றுள்ளது.

மன்னார் மாவட்டம் சிலாவத்துறை முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார், 8 பேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இரு பொம்மர்கள், இரு ஹெலிகப்டர்களின் உதவியுடன் படையினர் வெளியேறினர் இவர்கள் மீது முகாமில் இருந்து எண்ணூறு யார் தூரத்தில்வைத்து வடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர்.

இச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சிப்பாயின் சடலமும் இரு ஏ. கே. மகஸின்களும் கைக்குண்டு ஒன்றும் புலிகளால் மீட்கப்பட்டன. (71)

ரிச்சர்ட் டீ சொய்சா படுகொலை

## கொலையாளி குறித்த தகவல் கோரி பாராளுமன்றத்தில் விசித்திர விளம்பரம்

ரிச்சர்ட் டீ சொய்சாவின் படுகொலை சம்பந்தமான தகவல் தருவோருக்கு 5லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பத்திரிகை ஒன்றில் வந்த விளம்பரம் ஒன்றை எதிர்க்கட்சி எம். பீயான மங்களசமரவீர பாராளுமன்றத்தில்வாசித்துக்காட்டினார்.

இந்த விளம்பரத்தின் வாசகம் வருமாறு: முக்கிய சந்தேகநபர், உயரம் 5 அடி 6 அங், தலைமையிருக்கு 'டை' பூசியுள்ளார். நடுத்தரமான தோற்றமுடையவர். கறுப்பு நிறம், கொழும்பு 'மாபிய' இயக்கத்தைச்சேர்ந்தவர். மறியல்களை செசெல் — 4 ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் செங்கதிர் வீரமரணம்

வன்னிப் பிராந்தியத்தில் ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த தலைமைச் செயலக பிரசாரப் பொறுப்பாளர் செங்கதிர் வவுனியா இராணுவ முகாம் அருகே வழி தவறிச் சென்ற — 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மொழி "கொலையுடன்"

## வவுனியா தடைமுகாமில் தடைசெய்யப்பட்டவை

## வளலாய் நோக்கி செல்ல முயன்ற இராணுவம் மீது தாக்கு

பலாலி முகாமில் இருந்து இரு தடவை வெளியேற

நேற்று முன்தினம் காலையும் மீண்டும் நண்பகலும்

## மலையக தமிழ் மக்களும்

## தடைசெய்யப்பட்டவை

வவுனியா தடைமுகாமில் வடபகுதிக்கு எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ள 39 பொருள்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் மும்மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன.

அதிலும் தமிழ் மொழி பட்டுள்ளபாடு சொல்ல முடியாது என அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அந்தப் பட்டியலில் இடம்பெற்ற பொருள்களைக் கொண்டுவருபவர்கள் பெரிதும் கஷ்டப்படவேண்டியுள்ளதாகவும் சில சமயம் அவை பறிமுதல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 24)

பலாலி முகாமில் இருந்து இரு தடவை வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதில் படையினர், பின் வாங்கி முகாம் திரும்பினர்.

நேற்று முன்தினம் காலையும் மீண்டும் நண்பகலும் படையினர் வளலாய்ப்பக்கமாக வெளியேற இருதடவை முயன்றனர். எனினும் புலிகளின் தாக்குதலை யடுத்து படையினர் தமது முயற்சியை கைவிட்டனர். (71

## இந்தியாவிலிருந்து கடத்தல் படகு மூன்று சிங்களவர்கள் கைது

இந்தியாவிலிருந்து கடத்தல் பொருள்களுடன் வந்து கொண்டிருந்த படகு ஒன்றை கடற்படையினர் நீர்கொழும்பு கடற்பகுதியில் வைத்து துரத்திப்பிடித்தனர்.

அப்படகில் நாற்பது கட்டு இந்திய சாரிகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன. அதில்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மலையக தமிழ் மக்களும் இடம்பெயர்ந்துள்ளனர்

1977, 1983 இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு வவுனியா செட்டிகுளம் பகுதியில் வந்து குடியேறிய மலையகத் தமிழ் மக்களில் பெரும் பாலானோர் இப்போது அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

மடு, கிளிநொச்சி, ஓமந்தை, பூநகரி, யாழ்ப்பாணம் பகுதி

— 4 ஆம் பக்கம் பார்க்க

காணித்தகராறினால்

## வீடு எரிப்பு, நஞ்சூட்டிக் கொலை வேலணையில் பெண் விசாரணை

வேலணை சாட்டிப் பகுதியில் இடம் பெற்ற இரட்டைக் கொலை, வீடு எரிப்பு சம்பந்தமாக பெண் ஒருவரை விடுதலைப்புலிகள் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

கடந்த வருடம் சாட்டியில் ச. கதிரவேலு என்பவர் நஞ்சு வைத்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தனக்கு தொடர்பு இருப்ப

— 4 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பு பயணிகள்

நேற்று அதிகளவு பயணிகள் கொழும்பு செல்வதற்காக முத்திரைச் சந்தையில் காணப்பட்டனர்.

கடந்த வாரம் ஓமந்தைவரை சென்று திரும்பியர்களும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

மனித உரிமை மீறல் வழக்கில்

## நீதிமன்றத்தை அவமதித்ததாக பொலிஸார் மீது நடவடிக்கை?

மனித உரிமை மீறல் வழக்கொன்றில் மனுதாரரை மிரட்டிய மூன்று பொலிஸார் மீது நீதிமன்றத்தை அவமதித்ததற்காக ஏன் தண்டிக்கக் கூடாது என உயர் நீதிமன்றம் சட்டமா அதிபரைக் கேட்டுள்ளது.

ஹோமாகம பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களான நந்தசேன, மெண்டிஸ் ஆகியோருடன் சப் இன்ஸ்பெக்டர் உகுல் பெரேரா தமது வீட்டுக்கு ஆயுதங்களுடன் வந்து தாம் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெறாவிட்டால் கொல்லப்போவதாக தம்மை மிரட்டியதாக நீதிமன்றத்தில் முறையிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி இது போன்ற மனுக்களைத் தாக்கல் செய்த மேலும் நால்வ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நிலாவெளி பஸ்நிலையத்தில் கண்ணிவெடி

திருகோணமலை மாவட்டம் நிலாவெளி பஸ் நிலையத்தில் விடுதலைப் புலிகளால் ஏற்கனவே வைக்கப்பட்ட கண்ணி வெடியில் இராணுவத்தினர் சிக்கினர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## உடையார்கட்டில் யானை அடித்து இருவர் பலி, ஒருவர் காயம்

உடையார்கட்டில் சூடு மிதித்துக் கொண்டிருந்த வேளையில் மதம் கொண்டு திடீரென வந்த யானை ஒன்று அங்கு நின்றவர்களைத் துரத்தியது.

இதில் எல்லோரும் ஓடித் தப்பின போதிலும், த. அற்புதமலர் (41) என்ற பெண்மணியை யானை அடித்துக் காயப்படுத்தியது.

இவர் ஆபத்தான நிலையில் அங்கிருந்து யாழ் பெரியாஸ்பத்திரிக்கு பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டு

— 4 ஆம் பக்கம் பார்க்க

# பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தல்; உள்ளூராட்சி சபை உறுப்பினர் உட்பட எண்மர் கைது!

சர்வதேச விவகார நிபுணரும், கல்விமானுமான பேராசிரியர் எஸ். புல்ஜன்ஸ் கடத்தல் தொடர்பான புலன் விசாரணைகளில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக உள்ளூராட்சிச்சபை உறுப்பினர் ஒருவர் உட்பட எண்மர் கைது செய்யப்பட்டுத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்பு வட்டாரங்கள் கூறின.

1988-ம் வருடம் ஜூன் மாதம் 26-ம் திகதி தன் கொழும்பு வீட்டிலிருந்து காரில் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த பேராசிரியரை லான்ஸர் வாகனம் ஒன்றில் வந்தவர்கள் வழிமறித்துக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கைதானோர் மூலமாகப் பயனுள்ள பல தகவல்களைப் பெற முடியும் என நம்பப் படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நன்கு திட்டமிடப்பட்டே இச்சம்பவம் நிகழ்த்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## யூகோஸ்லேவிய ஜனாதிபதி பதவி விலகியதாக அறிவிப்பு

யூகோஸ்லேவிய ஜனாதிபதி திரு. பொரிஸ் ஜாபி பதவி விலகி விட்டதாக அறிவிக்கப் படுகிறது.

கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்கும் அவசர இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் எதிரொலியே இப்பதவி விலகல் என்று பெல்கிரேட் தகவல்கள் தெரிவித்தன.

இதனையடுத்து உப-ஜனாதிபதி திரு. மஸிசேக் பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுள்ளார்.

அடுத்த நடவடிக்கை குறித்து அவர் உடனடியாக ஆராயத் தொடங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வலைப்பந்தாட்டம்; வைக்கிங்ஸ் சாம்பியனானது

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் வருடா வருடம் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் இவ்வருடமும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகளின் ஓர் அங்கமாக நேற்று முன் தினம், திருச்குடும்ப கன்னியர் மடமகா வித்தியாலய திடலில், வைக்கிங்ஸ் கழக அணிக்கும், பாஷையூர் சென் அந்தனீஸ் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் வைக்கிங்ஸ் அணிகடும் மோதலின் பின் வெற்றிபெற்று இவ்வருட சம்பியனானது

தொடக்க முதல் வெகு பரபரப்பாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்த இப்போட்டியில் ஆரம்பத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கு ஒன்று விட்டுக்கொடுக்காமல் ஆடி சம நிலையில் இருந்த போதிலும், முடிவடையும் நேரம் நெருங்க நெருங்க வைக்கிங்ஸ் கழக அணி வீராங்கனைகள் தமது முழுத் திறமையையும் உபயோகித்து சாதுரியமாய் விளையாடியதனால் ஈற்றில் அவர்கள் கையே மேலோங்கியது.

இரு அணிகளினதும் வீராங்கனைகளும், தீர்ப்பாளர்களும், ஆட்டம் ஆரம்பமாவதற்கு முதல் யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு. அண்ணாதுரையவல் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளர் திரு. க. யதுகுலசிங்க அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

திருமதி ஏ. எல். யே. றூபசிங்கம் நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (16)

## ஜெயலலிதா பிறந்தநாள்

"டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இந்த நூற்றாண்டின் அரசியல் சாணக்கியன் மூன்று மாதத்தில் கருணாநிதி ஆட்சியைக் கவிழ்க்கிறேன் என்றார். ஆனால் அவர் இரண்டு மாதத்திலேயே ஆட்சியைக் கவிழ்ந்தார்" இவ்வாறு ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழாவில் பேசும் போது திருச்சி வேலுசாமி சொன்னார்.

ஜெயலலிதா தனது 43-வது பிறந்த நாளை சமீபத்தில் கொண்டாடினார்.

"வருங்கால முதலமைச்சர் வாழ்க" என்ற கோஷம் எங்கும் ஒலிக்கப் பிறந்த நாள் விழாக்கொண்டாடப்பட்டது.

## நீண்டநாட்களின் பின்னர் அலுவலகம் வரும் அங்கத்தவர்கள்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவில் நிர்வாகிகள் தெரிவு விரைவில் நடைபெறவுள்ளது.

இதனால் இதன் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் நீண்ட நாட்கள் இடைவெளியின் பின்னர் செஞ்சிலுவைச்சங்க யாழ் அலுவலகத்திற்கு தினமும் வந்து தாம் யுத்தகாலத்தில் சேவையாற்றியதாக கூறிக்கொள்வதாக செஞ்சிலுவைச் சங்கத்தொண்டர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜூன் மாதம் முதல் இடம் பெறும் விமானத்தாக்குதல்களின் போது பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் உள்ள அங்கத்தவர்களும் அப்பகுதியை எட்டியும் பார்க்காமல் பதவி மோகத்தால் இங்கு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

(ப. 11

## விநாயகர் உற்சவம்

வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயக் கொடியேற்றம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. 28 ஆம் திகதி ரதோற்சவமும், 29 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## மேல்நாட்டவரும் இப்போது பேய்க்கு அச்சம்

முன்பெல்லாம் மேல் நாட்டவர்கள் பேய் பிசாசுகளுக்கு அஞ்சுவதோ. அல்லது அவைகள் இருப்பதாகவோ நம்புவதில்லை. ஆனால் சமீப காலத்தில் அவர்களும் பேய்களுக்கு பயப்படுவதாகக் கூறப்படுகிறது. உலகிலேயே அதி உயரமான கட்டிடம் என்று கூறப்படும் அமெரிக்காவில் உள்ள 110 மாடிகளை உள்ளடக்கிய 'சியர்ஸ் டவர்' கட்டடத்தை விற்பதற்கு கடந்தசிலமாத காலமாக பகிரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். சுமார் 13 ஆயிரம் பேருக்கு மேல் வசித்து வந்த இக்கட்டடத்திற்கு, வருடத்திற்கு 15 இலட்சம் அயல்நாட்டுப் பயணிகள் வந்துசென்று கொண்டிருந்தனர்: ஆனால் அண்மைக் காலத்தில் இக்கட்டிடத்தில் பேய்கள் நடமாடுவதை தாம் கண்டதாகக் கூறி, அங்கு குடியிருந்தவர்களில் கணிசமானோர் அங்கிருந்து இடம்பெயர்ந்து விட்டனர். இதன் விளைவாக இக்கட்டிடத்தை விற்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. முதலில் இக்கட்டிடத்தின் விலை 1. 8 மில்லியன் டொலர்கள் என்று நிர்ணயித்திருந்த உரிமையாளர்கள், அதன் விலையை 550 மில்லியன் டொலர்களாகக் குறைத்தும்பேய்களுக்குப் பயந்து, அதனை மலிவு விலையில் வாங்கக் கூட எவரும் முன்வரவில்லை என்று கூறப்படுகிறது. (16)

## ஜெயலலிதாவுடன் தேர்தல் கூட்டு சந்திரசேகர் விருப்பம்

இந்திய காபந்து அரசின் பிரதமர் திரு. சந்திரசேகர் அ. தி. மு. க. வுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளமுனைகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில் அ. தி மு. க. வுடன் ஜனதா தள் (எஸ்) தேர்தல் கூட்டு வைத்துக்கொள்ள முயலும். அதற்கு அ. தி. மு. க. எப்படிச் செவிசாய்க்கிறது என்பதினைப் பொறுத்தே எதனையும் சொல்லமுடியும் என்றும் கூறியுள்ளார்,

## யோகர்சுவாமி கட்டுரைப் போட்டி

யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி 9 ஆம்- 10 ஆம்- 11 ஆம்- வருட மாணவர்களுக்கென யாழ் கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ளது.

23 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்களை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் தொடர்பு கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் கேட்...

## காந்தி சமாதிக்கு மாசு; பரவலாகக் கண்டனம்

புதுடில்லியில் உள்ள மகாத்மா காந்தியின் சமாதியை செ'குஜனச் சமாஜக் கட்சித் தொண்டர்கள் மாசு படுத்திவிட்டனர் என்று பல அரசியல் கட்சிகளும், காந்திய... என இ. காங்கிரஸ் இதனைக் கண்டித்து, மக்களிடையே இச்செயல் துவேசத்தைப் பரப்புவதாக உள்ளது எனக்கூறியுள்ளது

'வெட்கக்கேடான இச் செயல் ...

## கோப்பாயில்கல்வீச்சு விஷமிகள் புலிகளிடம்

கோப்பாய் வடக்கு குழையப்பர் கோயிலை அண்மித்த சில வீடுகள் மீது சமீப நாட்க...

UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA

VACANCY

Applications will be received by me from suitable candidates for the following post upto 1991.4.2

POST : SUB-WARDEN (FULL-TIME) (FEMALE) ON CONTRACT

AGE : Not more than 40 Years.

SALARY SCALE : Rs. 4000 /— p. m. (Fixed)

Application forms and particulars for the above post

SALARY
SCALE : Rs. 4000 /— p. m. (Fixed)

Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar/ Establishments of this University.

Request for application forms for the above post should be accompanied by a self - addressed stamped envelope of 23 X 10 c. m. in size.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991. 03. 14

03081

★ உங்களுக்குத் தேவையான புகைப்படங்கள்
★ றபர் சீல்
★ HALF TONE-LINE கலர் புளொக்ஸ் (BLOCKS)
★ கலர் பிலிம் கருள்கள்
★ ஓவிய வேலைகள்
★ கலர் பிலிம் சுருள்களைப் படமாக்குதல்
★ பிறேம் போடுதல்
★ விசிட்கேட் போடுதல்
விசிட்கேட் தயாரிப்பாளர்கள்

கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

03083

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் தொடர்பு கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திரு. கா. கணேசதாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மகாத்மா காந்தியின் சமாதியை செங்குஜனச் சமாஜக் கட்சித் தொண்டர்கள் மாசுபடுத்திவிட்டனர் என்று பல அரசியல் கட்சிகளும், காந்திய அமைப்புக்களும் கண்டித்துள்ளன. மக்களிடையே இச்செயல் துவேசத்தைப் பரப்புவதாக உள்ளது எனக் கூறியுள்ளது.

'வெட்கக்கேடான இச்செயல் நாட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது என்றும் அது கூறியுள்ளது.

நேற்று முன்தினம் நிகழ்ந்த இச்சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று ஜனதா தள் தெரிவித்துள்ளது.

கோப்பாய் வடக்கு குரையப்பர் கோயிலை அண்மித்த சில வீடுகள் மீது சமீப நாட்களாகக் கற்கள் வீசப்பட்டு வந்தன.

இவ் விஷமிகள் இப்போது பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (23)

## கொழும்பில் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா

புரட்சிக் கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நேற்று புறக்கோட்டைப் பழைய நகர மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

கொழும்பு முத்தமிழ் மன்றத்தினர் ஏற்பாடு செய்திருந்த இவ் விழாவிற்குப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமை தாங்கினார்.

பல அறிஞர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

## வடக்கு நோக்கிக் கூடுதல் படை

வடக்குக்கு படையினர் கூடுதலாக அனுப்பப்பட உள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்துள்ளார்.

கிழக்கிலும் தம் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்ததாக கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

## தமிழ்க் குழுக்களுக்கு ஜா அறிவுரை

"யோசனைகளை முன்வைப்பதில் காலங்கடத்தாதீர்" என தமிழ்க் குழுக்களுக்கு இந்தியத் தூதர் திரு என். என். ஜா அறிவுரை கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் முஸ்லிம் கட்சிகள் இனப்பிரச்சினை தொடர்பாக கூட்டு யோசனையை அரசுக்குச் சமர்ப்பிப்பதில் காலங் கடத்தக் கூடாது என்று அவர் தமிழ்க் குழுக்களை அழைத்துத் தூதரகத்தில் பேசிய போதே மேற்கண்ட அறிவுரையை வழங்கினாராம்.

## 5 ஆம் வருட புலமைப் பரிசில் பரீட்சை;

## மட்டு. முல்லை. திருமலை விண்ணப்பங்கள் வரவில்லை
## ஆணையாளர் வெதமுல்ல தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் விசேட ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சைக்கு இன்னும் இரு வாரங்களே உள்ளபோதிலும் திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தகவலைப் பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல வெளியிட்டுள்ளார்.

கடைசித் தினமான மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் வட, கிழக்கின் பல பகுதிகளில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. ஆனால் மேற்படி மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் வரவில்லை, ஆயினும் நாம் அங்கிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் சொன்னார்.

# ரயில்வேக்கு ரூபா 70 இலட்சம் நஷ்டம்; 3 நிறுவனங்கள் டிமிக்கி!

பன்னிரண்டு வருடகாலக் குத்தகைப் பணமான சுமார் எழுபது இலட்சம் ரூபாவை வழங்காது ரயில்வே திணைக்களத்தை மூன்று நிறுவனங்கள் ஏமாற்றி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வேச் சிற்றுண்டிச் சேவைக்குரிய குத்தகை வாடகைத் தொகையான 69 இலட்சத்து 92 ஆயிரத்து 882 ரூபாவை மூன்று நிறுவனங்களிடமிருந்து ரயில்வேத் திணைக்களம் பெறவில்லை என்றும் இது 1978-ம் வருடம் செப்டெம்பர் மாதம் முதல் 1990-ம் வருடம் செப்டெம்பர் மாதம் வரைக்குமான கட்டணங்கள் என்றும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது.

## நிதிவேண்டும்; சேகரிக்க நல்ல மதிவேண்டும்

அ. தி. மு. க. வுக்கு அவசரம் தேவைப்படுவது நிதி. அம்மா ஜெயலலிதா அதற்கான கட்டளைகளை அடிக்கடி பிறப்பித்த வண்ணமிருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு டிக்கற் கேட்டவர்களை ஆளுக்கு ரூபா ஆயிரம் செலுத்த வேண்டுமென்றார், வரும் தேர்தலுக்கு டபிளாக்கியிருக்கிறார் இப்போதே மூவாயிரத்து நானூற்று முப்பதெட்டுப்பேர் மனுச்செய்துள்ளனர். இதிலேயே தேறிய தொகை ரூபா அறுபத்தெட்டு லட்சத்து எழுபத்தாறாயிரம். அம்மா ஜெயலலிதா மதி சும்மா இருந்ததா? 'கட்டணம் ஐயாயிரமாக உயரட்டும் அதன் மூலம் மொத்த வசூல் ஒரு கோடியைத் தாண்டட்டும்' என்று ஹைதராபாத்திலிருந்து கட்டளையிட்டார். இப்போது அவரின் கட்டளையை நிறைவேற்றும் வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

## தமிழகத்தில் அகதிகள் கைது

தமிழ் நாட்டில் உள்ள ஈழத் தமிழர் அகதி முகாம்களில் தொடர்ந்து பலரும் கைது செய்யப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (50)

## அம்மன் கோவிலில் திருட்டு

கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் கோவிலுக்குள் சமீபத்தில் புகுந்த திருடர்கள் அங்கே பல பெறுமதி மிக்க பொருள்களை திருடிச் சென்றுள்ளார்கள்.

எட்டு வெள்ளி மூடிகள், மூன்று பதக்கங்கள் பொட்டு, இரண்டு கவர் மணிக்கூடுகள் மற்றும் பல விலையுயர்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

திருட்டுப் போன பொருள்கள் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியானவை என மதிப்பிடப்பட்டுள்ளது. (53

## குவைத்தில் வேலைவாய்ப்பு தொழிலமைச்சு அக்கறை

குவைத்தில் மீண்டும் இலங்கையர்க்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதில் தொழில் அமைச்சு அக்கறை கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தூதரகமும் அங்கு இது விடயத்தில் கரிசனை காட்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

## கல்கிசை மாவட்ட நீதிமன்றம் தீவைப்பு

கல்கிசை மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்திற்குத் தீ வைக்கப்பட்டது.

இதனால் பதிவு அறை ஆவணங்கள் நாசமாகின எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நீதிமன்றத்தை இனந் தெரியாதோர் தீ வைத்துக் கொளுத்தியதாகப் பொலிஸார் கூறினர்.

## உரும்பிராய் முதலிடம்

அண்மையில் மருதனமடக் கோட்டத்துக்கு இடையே நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் உரும்பிராய் இந்துக்கல்லூரி மேற்பிரிவுகளுக்கான நடனப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்நடன நிகழ்ச்சி மாவட்டங்களுக்கிடையேயான போட்டியில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (23)

## பங்கீட்டுக்கு ரயர், ரியூப்!

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சைக்கிள் ரயர், ரியூப் என்பனவற்றைத் தனது பிரதேசத்தில் உள்ள பாவனையாளர்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் வழங்கி வருகின்றது. (32)

## அண்டைநாடுகள் குறுக்கீடு ஹுசைன் குற்றச்சாட்டு

வளைகுடாப் போருக்குப் பின் தன்நாட்டு மக்களுக்கிடையே முதன் முறையாக உரையாற்றிய ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீண்டும் புதிய ஈராக்கை உருவாக்கிட விரைவிலேயே புதிய அரசு ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னார்.

ஈராக்கின் வடபகுதியில் சண்டை தொடர்கிறது என்று ஒப்புக்கொண்ட அவர் அண்டை நாடுகள் நாசவேலைக்காரர்களை அனுப்பி ஈராக்கின் உள் விவகாரங்களில் குறுக்கிடுவதாகவும் குற்றம் சாட்டினார்.

(நேற்றைய தொடர்ச்சி)

# 'கல்வியை வேலைவாய்ப்போடு போட்டுக் குழப்பக்கூடாது!'

- துணைவேந்தர் துரைராஜா

கே: நாட்டில் ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. கூடிய பட்டதாரிகளை மேலும் உருவாக்குவதினால் இப்பிரச்சினை மேலும் அதிகரிக்காதா?

ப: வேலையில்லாப் பிரச்சினையை இதனுடன் போட்டுக் குழப்பக்கூடாது. வேலையில்லாப் பிரச்சினை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. கல்வியை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஒரு நாடு தொழில் வளத்தில் முன்னேற்றம் அடைந்து, பொருளாதார அபிவிருத்தி அடைந்திருந்தால் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. கல்வியைப் பொறுத்தவரை, இலங்கையைச் சுற்றியுள்ள வளர்முக நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா ஆகிய நாடுகளுடன் இலங்கையை ஒப்பிடும்போது சனத்தொகை விகிதாசாரப்படி, இங்கு பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகள் மிகக்குறைவு.

### நிதி ஒதுக்கீடு

கே: பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றது நிதியினைக் கையாள்வதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதே?

ப: மாணவர்களின் தொகையின் அடிப்படையில் நிதி ஒதுக்கிடப்படுகிறது. இந்த நிதியைக் கட்டுப்பாட்டுடன் திறமையான முறையில் செலவு செய்வது எமது பொறுப்பு. உதாரணமாக ஒரு பீடத்தில் ஒரு துறைக்கு மாணவர்கள் குறைவாக இருப்பின் விரிவுரையாளர் பதவியை வேறு துறைகளுக்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்தலாம்.

### பொது மக்கள் பங்களிப்பு

கே: பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பொது மக்கள் எவ்வகையில் பங்களிப்புச் செய்யலாம்?

ப: பல்கலைக் கழகங்களுக்கு முக்கியதேவை நிதி. அரசில் மட்டும் தங்கியிராது, பொது மக்களிடம் இருந்தும் நிதிபெற்றால்தான் மாணவர்களுக்குப் போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். தென்பகுதியில் உள்ள பல்கலைகழகங்கள் பொது மக்களிடம் இருந்து பெருந்தொகையான நிதியைப் பெற்றுள்ளன. அதனால் பெரும் அபிவிருத்தியையும் அடைந்துள்ளன.

எமது பல்கலைக்கழகத்தில் இரு புதிய துறைகள் (1) சைவசித்தாந்தம் (2) Oncolgy (புற்றுநோய் சம்பந்தப்பட்டது) ஆரம்பிப்பதற்குப் பொது மக்கள் நிதி அன்பளிப்புச் செய்துள்ளார்கள். தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள் விண்ணப்பிக்காததினால், இப்பதவிகள் இதுவரை நிரப்பப்படவில்லை.

### வெளிநாடுகளில் வாழும் தமிழர்

கிளிநொச்சியில் அமைந்திருக்கும் எமது விவசாய பீடத்திற்கு பரமேஸ்வரா அறக்கட்டளையால் 48 ஏக்கர் நிலம் அன்பளிப்புச் செய்யப்பட்டது சிங்கப்பூரில் வசித்த அமரர் கார்த்திகேயன் என்பவர் தனது மரண சாசனத்தில் ஒன்றரைக் கோடி ரூபாவை நன்கொடையாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு எழுதிவைத்துள்ளார். இந்நிதி தமிழ்த்துறை வளர்ச்சிக்கும், இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மலேசியா போன்ற நாடுகளில் வசிக்கும் பல அன்பர்கள் யாழ் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி செய்துள்ளார்கள்.

### துணைவேந்தர் நிதியம்

1989 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. கஷ்டப்படும் மாணவர்களுக்குப் பண உதவி செய்யும் நோக்கத்துடன் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த துணைவேந்தர் நிதியத்துக்கு இக்குறுகிய காலத்தில் 12 லட்சம் ரூபா நன்கொடையாகக் கிடைத்துள்ளது. சென்ற ஆனி மாதத்தில் ஆரம்பமான போரின் காரணமாக நிர்க்கதிக்கு உள்ளான பல பிற மாவட்ட மாணவர்களுக்கு இந்த நிதியத்தில் இருந்து பணஉதவி செய்யப்பட்டது.

மஹாபொல, உதவிப்பணம் (Bursary) போன்று இந்த நிதியத்தில் இருந்தும் தற்போது 120 கஷ்டப்பட்ட மாணவர்களுக்கு மாதம் ரூபா 400/— கொடுத்துவருகின்றோம். தென் தமிழீழ மாணவர்களுக்கு இப்பணம் போதாது தற்போதைய சூழ்நிலையில் அவர்களுக்குப் பெற்றோரிடமிருந்தும் பணம் பெறுவது கஷ்டம். எனவே இந்த நிதியத்துக்கு இன்னும் நிதிவசதி கூட இருப்பின், கூடிய பண உதவியை நாம் செய்யலாம். பொதுமக்கள் இதைக்கருத்தில் கொண்டு பணஉதவி செய்ய முன்வரவேண்டும்.

நேரத்தைப் பார்க்கிறேன். இரவுமணி பத்தரை. நேரம் போனதே தெரியவில்லை துணைவேந்தருடன் அளவளாவிய இந்த மூன்று மணி நேரமும் இன்பமான பொழுதாகக் கழிந்தது. அவர் இரவு உணவு உட்கொள்ளவில்லை என்பது ஞாபகம் வரவே நன்றி கூறி விடைபெறுகிறேன்.

''வெளியில் இருட்டு, கவனம்'' என்று சொல்லித் தனது உதவியாளரை மண்ணெண்ணெய் விளக்குடன் கேற்வரையும் அனுப்பி வைக்கிறார். ஓ, அறிவில் மட்டுமல்ல, பண்பாட்டிலும் ......!''

பேட்டி கண்டவர் வி.வி

## மன்னாரில் இரு மைல் தூர

'திரு முறையில் விஞ்சிநிற்பது எது?'

போட்டியில் பங்குபற்றவுள்ள வகை குறிப்பிடத்தக்கது (23)

... புதிய அரசு ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னார்.

... குறுக்கிடுவதாகவும் குற்றம் சாட்டினார்.

## பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தில் 17 அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்விப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் 31.12 1988 ஆம் திகதிக்கு முன்னர் மூன்று வருட காலம் தொடர்ச்சியாகக் கடமை புரியும் - அதிபர்களாகச் சேவையாற்றிய ஆசிரியர்கள் 17 பேர் அவரவர் கடமையாற்றிய பாடசாலையின் தரத்திற்கேற்ப நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கமைய மூன்று பேர் முதலாம் தர அதிபர்களாகவும், ஆறு பேர் இரண்டாம் தர அதிபர்களாகவும், எட்டுப் பேர் மூன்றாம் தர அதிபர்களாகவும் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர். 1-6-1989 ஆம் திகதி முதல் செயற்படும்படியாக இவர்களுக்குக் கல்விச் சேவை ஆணைக்குழு கடிதங்கள் அனுப்பியுள்ளது. (18)

## இவர்கள் அங்கே உல்லாசம்

கொழும்பில் தங்கியுள்ள யாழ் வாசிகள் சிலருக்கு உறவினரின் வெளிநாட்டுப் பணம் வருவதால் சினிமா, காலிமுகத் திடல், மதுபானச் சாலை என்று அவர்கள் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகிறார்களாம்.

கொழும்பு திரையரங்குகளில் தினமும் இவர்களைக் காண முடிகிறதென்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிய, புதிய படங்கள் திரையிடப்படுவதால் பகலில் சாப்பிடாவிட்டாலும் படம் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மெட்னிக்காட்சிகளுக்கு இவர்கள் செல்கிறார்களாம். (33)

## சான்றிதழ் வழங்கப்பட்டது

வலிகாமம் வடக்குப் பிரதேச சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையின் சகல தரத்திலும் உள்ள உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் மல்லாகம் குளமங்கால் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ் வைபவத்திற்கு சென்ஜோன்ஸ் முதலுதவிப்பிரதேச அத்தியட்சகர் க. அருந் தவராஜா தலைமைதாங்கினார்.

பிரதம விருந்தினராக வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் க நடராஜாவும், சிறப்பு விருந்தினராகப் பரியோவான் முதலுதவிப் படை, மாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியும், சுன்னாகம் பங்குத் தந்தை வண. பிதா 'மொன்போட்' அடிகளாரும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து எமலோகத்தில் சென்ஜோன்ஸ் படை என்ற நாடகம், அங்கத்தவர்களால் மேடையேற்றப்பட்டது. (16, 52)

## மன்னாரில் இரு மைல் தூர மீன்பிடி அனுமதி கிடைக்கும்

மன்னாரில் இரு மைல் தூர கடற் பிராந்தியத்துக்குள் மீன்பிடிக்க அனுமதியளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவ்வனுமதி தலைமன்னாருக்கும், பேசாலைக்கும் இடையே மாத்திரமே வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

இவ் அனுமதி முதலில் இருபத்தைந்து பிளாஸ்டிக் படகுக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (16)

## யாழும் குழலும்

'குழல் இனிது யாழ் இனிதுஎன்பதம் மக்கள் மழலைச் சொல்கேளாதவர்' 'என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறியதனை அறிஞர் திருக்குறள் முனுசாமி விளக்கிய தன்மையினை திருச்சி வானொலி நேற்றுமுன் தினம் தன் சிறப்புநிகழ்ச்சியில் குறிப்பிட்டது அவர் சொல்கிறார்:- 'குழல் என்பது வாயினால் வாசிக்கும் இசைக்கருவிகள் அனைத்தையும் குறிக்கிறது. யாழ் என்பது கையினால் வாசிக்கின்ற இசைக் கருவிகள் அனைத்தையும் குறித்து நின்றது. இசைக் கருவிகளை யெல்லாம் இரண்டாகப் பிரித்தால் ஒன்று குழல் என்பதிலே அடங்கும். மற்றொன்று யாழ் என்பதிலே அடங்கும்என்பதால் அப்படிச்சொன்னார் திருவள்ளுவர் உலகத்திலே மனிதன் அடையக் கூடிய இன்பங்களிலே ஒருவகைதான் மழலைச் சொற்களால் அனுபவிக்கின்ற இன்பம் குழந்தைகளால் ஏற்படும் இத்தகைய இன்பத்தை நுகர்வதற்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டும்

## 'திருமுறையில் விஞ்சிநிற்பது எது?'

கடந்த சிவராத்திரி தினத்தன்று உரும்பராய் ஞானவைரவர் ஆலயத்தில் திருமுறைகள் சம்பந்தமான ஆய்வு ஆணைக்குழு அனைத்திலங்கை கம்பன் கோட்டத் தலைவர் திரு. ஜெயராஜ் தலைமையில் கூடியது. இவ்வாணைக்குழுவில் திருமுறைகளில் விஞ்சி நிற்பது பக்தியா, சமூகமா, தத்துவமா என்ற கருத்து மோதல்கள் காரசாரமாக இடம்பெற்றன.

திருமுறைகளில் விஞ்சிநிற்பது பக்தியே என பலாலி ஆசிரியர் கலாசாலை உப அதிபரும், கவிஞருமான திரு. சோ.பத்மநாதனும் காரை நகர் கம்பன் கழகத் தலைவர் திரு.சிவகுமாரனும் சமூகமே யென திரு சிவராமலிங்கமும் கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரையும்தத்துவமேயென திரு.க.நாகேஸ்வரனும் திரு. ரகுவரனும் கருத்துரை வழங்கினார்கள். இவ் வேளையில் இடையிடையே வாதிடுவோரை தலைவரின் குறுக்கு விசாரணைகள் திணறடையச் செய்தபோதும் வாதிடுவோர் ஆணித்தரமான கருத்துகளை முன்வைத்தமை சிறப்பாகக் காணப்பட்டது. (23)

★ கல்வியமைச்சு அதிகாரிகளுக்கு சுற்றுநிருபம்

# இவ்வாண்டு ஆகஸ்ட் முதல் நாடு முழுவதும் பாடசாலைகளில் மும்மொழிப் பரீட்சை

மாணவர்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பிக்கும் திட்டத்தின் கீழ் முதன் முறையாக ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு மும் மொழியிலும் பொதுப் பரீட்சை ஒன்றை நடாத்தி சான்றிதழ் வழங்கும் நடைமுறை இந்த ஆண்டு 1991 ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதற்கான சுற்று நிருபம் ஒன்றை சகல மாகாணக் கல்வி அமைச்சர்களுக்கும், மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டங்களுக் குப் பொறுப்பாகவுள்ள பிரதம கல்வி அதிகாரிகளுக்கும் பாடசாலைத் தலைவர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ள இப்பரீட்சை எதிர்வரும் வருடங்களில் கட்டாயபாடமாக வுள்ளது.

மொத்தம் 120 புள்ளிகளுக்காக நடாத்தப்படும் இப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 60 புள்ளிகளையாவது மாணவர் பெற்றுச் சித்தியடைய வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பாடசாலைகளிலிருந்தோ, வெளியில் இருந்தோ தொண்டு அடிப்படையில் ஆசிரியர்களை சேவை புரிய அழைக்கலாமெனவும் இது பாடத்திட்டங்களுக்குப் புறம்பான இடைப்பாட விதானச் செயற்பாடாக அமைய வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டிருப்பதுடன் மாதிரி வினாத்தாளொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு ஐந்தாம் ஆண்டு மாணவர் தவிர ஏனைய மாணவர்களும் தோற்றி சான்றிதழ் பெறலாம் என்பதும் குறிப்பிடத் தக்கது. (32)

## கலாசார அலுவலக திணைக்களம் அங்கீகாரம்

# அறநெறிப் பாடசாலையில் ஓவிய, சிற்ப டிப்ளோமா நெறி

நல்லூர் சிவசாமி சித்திரக் கோட்டமும் சிற்பசாலையும் இந்து சமய கலாசார அலுவலக திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சித்திரம், சிற்பக்கலைகளில் டிப்ளோமா சான்றிதழ் வகுப்புகள் இப்பாடசாலையில் எதிர்வரும் புத்தாண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி வகுப்புகளை சிற்பக்கலாநிதி செ. சிவப்பிரகாசம் மேற்கொள்வார்.

இப்பயிற்சி நிலையத்திலேயே நிரந்தர கண்காட்சி விற்பனை நிலையமும் செயற்படவுள்ளது.

# அலரிக்காய் சாப்பிட்ட 8 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ் பெரியாஸ்பத்திரியில் நேற்று மட்டும் எட்டுப்பேர் அலரிக்காய் உண்டதால் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் பெண்களாவர்.

அண்மைக்காலமாக அலரிக்காய் தின்று தற்கொலை புரிவோரின் தொகை அதிகரித்து வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் அதிகம்பேர் குடும்பத் தகராறு, காதல் பிரச்சினை காரணமாகவே இவ்வாறு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

# தீவுப்பகுதியில் வீடற்றோருக்கு புதிய வீடுகள் கட்டப்படும்

தீவுப்பகுதியில் வீடுகள் இல்லாதவர்களுக்கு முதற்கட்டமாக 50 வீடுகளைக் கட்டிக் கொடுக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பத்து வீடுகள் புங்குடுதீவுப் பகுதியில் கட்டப்பட்டு வருகின்றன.

இதனையடுத்து ஏனைய தீவுப்பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (19)

# வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளுக்கு உதவிகள்

நீர்வேலியிலுள்ள யாழ மாவட்ட உளர்வலய அபிவிருத்தி மன்றம் விவசாயிகளுக்கான பசளை வகைகள் மண்ணெண்ணெய் ஆகியவற்றைத் தற்போது வழங்கி வருகிறது.

வலிகாமம் கிழக்கு, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் மூவாயிரம்

## நீதிமன்றத்தை...

ருக்கும் இதே கதி ஏற்படும் என்று பிரதிவாதிகள் எச்சரித்தனராம்.

# காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை கொழும்பில் சங்கம் ஆராயும்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் எதிர்காலம் பற்றி ஆராய ஊழியர் சங்கத்தலைவரையும் செயலாளரையும் உடனடியாக கொழும்புக்கு வருமாறு ஊழியர் சங்கம் கேட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

இத்தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டநிலையை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது இங்குகுறிப்பிடத்தக்கது. (74)

# ஹோம் பினான்ஸ் கம்பனி வாடிக்கையாளருக்கு ஏமாற்றம்

ஹோம் பினான்ஸ் கம்பனியில் வைப்பிலிட்ட யாழ் வாசிகளுக்கு அப்பணம் மீளக் கிடைக்கமாட்டாதென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக்கம்பனி முறிவடைந்ததையடுத்து நிவாரணம் கோரி மத்திய வங்கிக்கு விண்ணப்பித்தும் நேரில் சென்றும் பலதடவைகள் கேட்டபோது மத்தியவங்கி அதிகாரிகள் கையை விரிக்கின்றனராம்.

தாம் இந்தக் கம்பனியை நம்பி பல லட்சம் ரூபாவை வைப்பிலிட்டும் இப்போது வட்டியும் இல்லை முதலும் இல்லையென வைப்பிலிட்ட ஒருவர் கவலை தெரிவித்தார்.

மத்திய வங்கி அதிகாரிகள் தாம் என்ன செய்வது அது உங்கள் பிழை என்று கூறி நிவாரணம் வருகிற நேரம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றனராம். (33)

## மேஜர்...

தினால் எதிரியின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரமரணம் அடைந்துள்ளார் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

32 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான மேஜர் செங்கதிர் (நடேசு இரஞ்சித வரதராசா) 1984-ம் ஆண்டு தன்னைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துக் கொண்டிருந்தார்.

தமிழீழ-இந்திய போரின் போது வடமராட்சிப் பகுதியிலேயே நின்றபடி போராட்ட வேலைகளில் ஈடுபட்டுக்

# பட்டதாரி ஆசிரியர் விவரங்களை மாகாண அமைச்சு திரட்டுகிறது

பட்டதாரிகளாக இருந்தும் இதுவரை பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படாத ஆசிரியர்களின் விவரங்களை வடக்கு கிழக்கு பிரதேசக் கல்வித்திணைக்களங்களில் இருந்து மாகாணக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

மேற்படி ஆசிரியர்களைப் பட்டதாரிகளாக நியமிக்க நடவடிக்கை எடுக்கும் முன் ஏற்பாடாகவே இது மேற்கொள்ளப்படுவதாக நம்பப் படுகின்றது.

இவ்வாறான ஆசிரியர்கள்

## இலங்கை...

கேட்டுள்ளது.

கூட்டுத் தாபனத்தின் பெயரை பாவித்து நிதிகள்

# யாழ் வாசிகளின் வாடகையால் சிங்களவருக்கு வருமானம்

கொழும்பு மாநகரில் தற்போது வீடுகளில் திருத்த வேலைகள் செய்யப்பட்டு அறைகள் புதிதாக அமைக்கப்பட்டுவருகின்றன.

எவ்வளவு செலவானாலும் இவற்றை அமைத்து வடபகுதியில் இருந்து வருபவர்களுக்கு அதிக கட்டண வாடகைக்கு கொடுத்துவிடுகிறார்கள்.

இதுவே இவர்களுக்கு ஒரு வருமானமாகக் கிடைப்பதாக கொழும்புப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் தனது வீட்டை இவ்வாறு பல அறைகளாகப் பிரித்து வாடகைக்கு விட்டு மாதம் பத்தாயிரம் ரூபாவுக்குமேல் வருமானமாகப் பெறுகிறார். மூன்று ஆயிரம் ரூபாவாக இருந்த அறை வாடகைக்கு இப்போது மூவாயிரம் ரூபா கேட்கின்றனராம். (33)

# இடம் மாறிய ஆசிரியருக்கு முழுச் சம்பளம் கிடைக்கும்

வெளிமாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கு மாற்றம் பெற்று வந்த ஆசிரியர்களுக்கு பழைய மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் இருந்து சம்பள விவரப் பத்திரம், சுயவிவரக் கோவைகள் வந்து சேராவிடினும் அவர்களது முழுச் சம்பளமும் வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்காக மாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் ஒரு சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதன் மூலம் தமது உண்மையான முழுச் சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கேற்ப இதுவரை தமது உண்மையான சம்பளங்களைப் பெறாத ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தைத் தவிர்த்து பொருத்தமான வேறு நேரத்தில் நிதி உதவியாளரை சந்திக்குமாறு பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அதிபர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார். (82)

## வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தன்னாமுனை சிவன் வாடியருகே இராணுவத்துடன் நடந்த மோதலில் மங்கோத்தரா (மட்டக்களப்பு) ஆதரவாளர் குமார் (இருதயபுரம்) ஆகியோரும் புலிபாய்ந்தகல்லில் நடந்த மோதலில் விமல் (த. பிரபாகரன், பொத்துவில்) என்பவரும் புலிகள் தரப்பில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## தபால்கள் வந்தன

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் பருத்தித்துறை வந்த குமண கப்பலில் 83 வெளியூர் தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளன.

## கொலையாளி...

வத்தை (வாழைத்தோட்டம்) பகுதிகளில் இவர் நடமாடுவார்.

இவரது உடைகளில் ஆர். என்று லோண்றி அடையாளமும் டயர் எரியும் மணமும் இருக்கும்.

சமய போதகரான இவர் சுசரித சுலோகங்களை அடிக்கடி ஓதுவார்.

இவர் பௌத்த விகாரையிலோ, பன்சலையிலோ மறைந்திருக்கக் கூடும்.

அவர் ஆயுதம் தரித்திருப்பதால் பௌத்த குருமாரோ, பொதுமக்களோ அவரை நெருங்க வேண்டாம் என எச்சரிக்கை செய்யப் படுகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த விமான விபத்தில் உபாலி மர்மமான முறையில் மரணமானது குறித்து இவர் தேடப்படுகிறார்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் இவ்வாறு

### நீதிமன்றத்தை...

ருக்கும் இதே கதி ஏற்படும் என்று பிரதிவாதிகள் எச்சரித்தனராம்.

தாக்கல் செய்யப்பட்ட ஐந்து மனுக்களிலும் ஹோமகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸாருடன், உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான கைது, தடுத்து வைத்தல், சித்திரவதை முதலிய குற்றச் சாட்டுக்கள் இவர்கள் மீதுசாட்டப்பட்டுள்ளன. இவ்வழக்கு அடுத்தமாதம் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### இந்தியாவிலிருந்து...

வந்த மூன்று சிங்களவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தப்படகை நிறுத்துமாறு கடற்படையினர் எச்சரிக்கை செய்தபோது அது வேகமாக ஓடியதாகவும் படையினர் மேல் நோக்கிச் சுட்டு தடுத்து நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

வருகிறது.

வலிகாமம் கிழக்கு, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் மூவாயிரம் விவசாயிகளுக்கு இபபொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

அமெரிக்கக் குடியரசின் உதவியின் கீழ்மேற்கொள்ளப்படும் இச் சிறுபயிர் விவசாயத்தில் ஒவ்வொரு விவசாயியும் கால் ஏக்கர் நிலத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள பயறு, குரக்கன், எள்ளு, சோயா, கௌபி மற்றும் மரக்கறி விதைகள் ஆகியன ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன

ஒருவருக்கு இரண்டேகால் அந்தர் உரம் 32 லீற்றர் மண்ணெண்ணெய் என்ற விதத்தில் விவசாயிகளுக்கு உதவியளிக்கப் பட்டுள்ளது

## புனித சூசையப்பர் திருநாள்

புலோலி புனித சூசையப்பர் தேவாலய வருடாந்த திருநாள் நாளை செவ்வாய் நடைபெறுகிறது. இன்று புனிதரின் திருச்சொரூபப்பவனி இடம்பெறும். (15)

டிருந்தார்.

தமிழீழ-இந்திய போரின் போது வடமராட்சிப் பகுதியிலேயே நின்றபடி போராட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பின்னர் புலிகளின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உதயமான வேளை அதன் துணை அமைப்பாளராக செங்கதிர் விளங்கினார்.

ஒரு சிறந்த பேச்சாளனும் அதேசமயம் கலைஞனாகவும் இருந்த மேஜர் செங்கதிர் தலைமைச் செயலகத்தின் பிரசாரப் பொறுப்பாளராகவும் இருந்து திறம்பட செயலாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய விடுதலையுடன் கூடிய சமூக விடுதலையை இலக்காகக் கொண்ட புலிகள் இயக்கத்தின் இலட்சியத்தினை நோக்கிய வேலைத் திட்டங்களிலும் அரசியல் பிரசாரங்களிலும் மேஜர் செங்கதிர் காட்டிய ஈடுபாடு அளப்பரியது.

25. 2. 91 அன்று வவுனியாவில் வீரமரணமடைந்த மேஜர் செங்கதிருக்கும் அவருடன்வீரமரணமடைந்தசிந்து (இரகுநாதன் சரவணபவான்) வுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது

### இலங்கை...

கேட்டுள்ளது.

கூட்டுத் தாபனத்தின் பெயரை பாவித்து நிதிகள் பெற்றமை, போலியான ஆவணங்களை சமர்ப்பித்து சுங்கத் திணைக்களத்தை ஏமாற்றியமை போன்ற ஊழல் குற்றச்சாட்டுகள் இந்த மேல் அதிகாரிகள் மீது சாட்டப்பட்டுள்ளது. விரைவில் நீதிமன்றத்தில் இது குறித்த வழக்கும் தாக்கல் செய்யப்படவுள்ளது.

### இழக்கில்...

தஞ்சம் புகுந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது இப்பகுதி மக்கள் நடமாட இராணுவத்தினரால் தடைவிதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது.

தாம் வேட்டை ஆடியே சீவிப்பதாகவும் இக்குறவர்கள் மேலும் தெரிவித்தனர்.

### வீடு...

தாக அப்பெண்மணி விசாரணையில் ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது காணித் தகராறே இதற்குக் காரணமாம்.

மரணமான கதிரவேலுவின் மனைவியையும் பழஞ் சோற்றினுள் நஞ்சு கலந்துகொலை செய்தது குறித்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன. (19)

நடவடிக்கை எடுக்கும் முன் ஏற்பாடாகவே இது மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படுகின்றது.

இவ்வாறான ஆசிரியர்கள் தமது பெயர், நியமனத் தன்மை, தற்போது சேவை புரியும் பாடசாலை ஆசிரியரான முதல் நியமனத் திகதி, பட்டம் பெற்ற பல்கலைக் கழகமும், வருடமும், பட்டம் பெற்ற பாடங்கள், தற்போது பெறும் மாதாந்தச் சம்பளம் என்பனபற்றிய விவரங்களை தமது அதிபர்கள் மூலம் கொத்தணி அதிபர் ஊடாக கோட்டக் கல்வி அதிகாரிக்குச்சமர்ப்பித்து பிரதேச கல்வித் திணைக்களத்துக்குச் சேர வழிவகுக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (32)

### நிலாவெளி..

நேற்றுக் காலை நடைபெற்ற இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிவரம் தெரியவில்லை. (71)

### கொழும்பு...

இதில் அடங்குவார்கள்.

இதேசமயம் லொறிகளும் கொழும்பு சென்றதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. (33 74)

தேடப்படுகிறார்.

அண்மையில் உள்ளபொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் இவ்வாறு அந்த எம். பீ கூறினார். (33)

### உடையார்கட்டில்...

வரப்பட்டார். இதற்கு 6000 ரூபா செலவானது என இப் பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

தலையில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளதுடன் எலும்புகள் உடைந்திருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் ஒரு தாயும் மகளும் யானை அடித்துக் கொலைப்பட்டதும் தெரிந்ததே.

இந்த யானை இப்பகுதியில் தொடர்ந்தும் அட்டகாசம் புரிவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர். (74

### மலையக...

களில் இவர்கள் தற்போது தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் கூலி வேலை செய்தும், காடுகளை வெட்டி விவசாயம் செய்து வந்ததாகவும் இப்போது எதுவித தொழிலுமின்றி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, "டக்ஸ் பில்டிங்"கில் உள்ள அச்சகத்தில் 18 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.